TUESDAY
June 6, 2023
CHENNAI
TAMIL NADU EDITION
16 Pages ₹6.00

# THE HINDU

www.thehindu.com
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

# NIRF report: Jipmer places fifth in medical college category

**The Hindu Bureau**
PUDUCHERRY

The Jawaharlal Institute of Postgraduate Medical Education Research (Jipmer) has been ranked fifth in the medical colleges category in the new report of the National Institute Ranking Framework (NIRF) for 2023 released by Minister of State for Education and External Affairs Rajkumar Ranjan Singh in New Delhi on Monday.

According to a press release, Jipmer has moved up from sixth place in the previous year's NIRF report in the medical colleges category. In fact, this is the third consecutive year the institution has improved its ranking, having been placed eighth in 2021.

The NIRF rankings are based on a set of parameters such as teaching, learning and resources, research and professional practice, graduation outcomes, outreach and inclusivity and perception.

**This is the third consecutive year the institution has improved its ranking, having been placed eighth in 2021 and sixth in 2022**

**Placed 39th overall**

Besides, in the overall NIRF rankings among all universities in the country, Jipmer has moved up 15 places in 2023, climbing from 54th rank in 2022 to 39th in 2023. Jipmer Director Rakesh Aggarwal attributed the achievement to the collective efforts of all members of the institute as well as the its efforts to continuously improve its teaching infrastructure and teaching-learning methods.

THE NEW INDIAN EXPRESS
TAMIL NADU
02 VILLUPURAM TUESDAY 06.06.2023

# JIPMER placed 5th in NIRF's med category

Puducherry: JIPMER secured fifth place in the medical category of the National Institute Ranking Framework (NIRF), 2023. In 2022, JIPMER held the sixth place, according to data released by Minister of State for Education and External Affairs, Dr Rajkumar Ranjan Singh in New Delhi on Monday. NIRF evaluates institutions and universities on five generic parameters, namely: teaching, learning and resources; research and professional practice; graduation outcomes; outreach and inclusivity; and perception. JIPMER's overall rank has also moved up 15 places, from 54 in 2022 to 39 in 2023. These feats have been achieved through hard work and dedication of all members of the faculty and staff, said JIPMER Director Rakesh Agarwal in a release.

CHENNAI
செவ்வாய், ஜூன் 6, 2023
5
இந்து தமிழ் திசை

### உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியல் வெளியீடு

# மருத்துவப் பிரிவில் ஜிப்மர் 5-வது இடத்துக்கு முன்னேற்றம்

● புதுச்சேரி

தரவரிசை பட்டியலில் மருத்துவப்பிரிவில் ஜிப்மர் நடப்பாண்டு 5-வது இடத்தை பிடித்துள்ளது.

இதுதொடர்பாக ஜிப்மர் இயக்குநர் ராகேஷ் அகர்வால் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுடெல்லியில் 2023-ம் ஆண்டுக்கான உயர்கல்வி நிறுவனங்களின் தேசிய தரவரிசைப்பட்டியலை மத்திய கல்வி இணை அமைச்சர் ராஜ்குமார் ரஞ்சன் சிங் வெளியிட்டார். தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் மூலம் வெளியிடப்பட்ட இந்திய தரவரிசை 2023-ல் மருத்துவப் பிரிவில் ஜிப்மர் 5-வது இடத்தை பிடித்துள்ளது.

ஜிப்மர் நிறுவனம் முந்தைய ஆண்டில் ஆறாவது இடம் பிடித்திருந்தது. தற்போது ஒரு இடம் முன்னேறியுள்ளது.

கடந்த 2021-ல் 8-வது இடத்தில் ஜிப்மர் இருந்தது. கடந்த இரு ஆண்டுகளில் ஜிப்மர் நிறுவனம் 8-வது இடத்திலிருந்து 5-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

ஒட்டுமொத்த பல்கலைக் கழகத்துக்கான தேசிய நிறுவன தரவரிசை பட்டியலில் ஜிப்மர் நடப்பாண்டில் 15 இடங்கள் முன்னேறியுள்ளது.

அதாவது 2022-ல் 54-வது இடத்திலிருந்து 2023-ல் 39வது இடத்தை அடைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
6.6.2023 (செவ்வாய்க்கிழமை)

# தேசிய தரவரிசை பட்டியலில் ஜிப்மருக்கு 5-வது இடம்

புதுச்சேரி, ஜூன்.6-

புதுச்சேரி ஜிப்மர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

கல்வி மற்றும் வெளியுறவுத்துறை இணை மந்திரி ராஜ்குமார் ரஞ்சன் சிங் டெல்லியில் நடைபெற்ற விழாவில் 2023-ம் ஆண்டுக்கான உயர்கல்வி நிறுவனங்களில் தேசிய தரவரிசை பட்டியலை வெளியிட்டார். தேசிய தரவரிசை கட்டமைப்பு என்பது நாட்டில் உள்ள கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழங்களை தரவரிசைப்படுத்த இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்பாகும்.

தரவரிசை கட்டமைப்பானது கற்பித்தல், கற்றல், கற்பிக்கும் வளங்கள், ஆராய்ச்சி மற்றும் தொழில் தொழில்முறை பயிற்சி, பட்டப்படிப்பு முடிவுகள், சமுதாய வளர்ச்சி, சேவைக்கான முயற்சி, அனைத்து தரப்பினருக்குமான சமமான வாய்ப்பை வழங்குதல், கல்வி நிறுவனத்தை பற்றிய அறிஞர்களின் அங்கீகாரம் ஆகிய அளவுகோல்களின் மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் மதிப்பீடு செய்கிறது.

இந்த தேசிய தரவரிசை கட்டமைப்பின் மூலம் வெளியிடப்பட்டுள்ள இந்திய தரவரிசை 2023-ல் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவப்பிரிவில் கடந்த ஆண்டு 6-வது இடத்தில் இருந்து ஒரு இடம் முன்னேறி 5-வது இடத்தை பிடித்துள்ளது. மேலும் நாட்டில் உள்ள ஒட்டுமொத்த பல்கலைக்கழகத்திற்கான தேசிய நிறுவன தரவரிசை பட்டியலில் ஜிப்மர் 39-வது இடத்தை பிடித்துள்ளது. கடந்த ஆண்டு 54-வது இடத்தில் இருந்தது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்
ஜூன் 6, 2023 செவ்வாய்க்கிழமை

# தேசிய நிறுவன தரவரிசையில் ஜிப்மருக்கு 39வது இடம்

புதுச்சேரி, ஜூன் 6: புதுச்சேரி ஜிப்மர் இயக்குநர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஒன்றிய கல்வி இணை அமைச்சர் ராஜ்குமார் ரஞ்சன் சிங் டெல்லியில் நேற்று நடந்த விழாவில் 2023ம் ஆண்டிற்கான உயர்க் கல்வி நிறுவனங்களின் தேசிய தரவரிசை பட்டியலை வெளியிட்டார். இதில் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவ பிரிவில் 5வது இடத்தை பிடித்துள்ளது. கடந்தாண்டு 6வது இடத்திலிருந்து ஒரு இடம் முன்னேறியுள்ளது.

மேலும், நாட்டில் உள்ள ஒட்டுமொத்த பல்கலைக்கழகத்திற்கான தேசிய நிறுவனங்களின் பட்டியலில் ஜிப்மர் நடப்பாண்டில் 15 இடங்கள் முன்னேறியுள்ளது. அதாவது, 2022ல் 54வது இடத்தில் இருந்து, 2023ல் 39வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தினமணி
செவ்வாய்க்கிழமை, 6 ஜூன் 2023

# மருத்துவத் தரவரிசைப் பட்டியலில் புதுச்சேரி ஜிப்மருக்கு 5-ஆம் இடம்

புதுச்சேரி, ஜூன் 5: தேசிய அளவிலான மருத்துவத் தரவரிசைப் பட்டியலில் புதுச்சேரி ஜிப்மருக்கு 5-ஆம் இடம் கிடைத்தது.

2023-ஆம் ஆண்டுக்கான உயர் கல்வி நிறுவனங்களின் தேசிய தரவரிசைப் பட்டியலை, புதுதில்லியில் மத்திய கல்வித் துறை இணையமைச்சர் ராஜ்குமார் ரஞ்சன் சிங் வெளியிட்டார். இதில், மருத்துவப் பிரிவில் ஜிப்மர் 5-ஆம் இடத்தைப் பிடித்தது. ஜிப்மர் நிறுவனம் கடந்த ஆண்டில் தேசிய அளவிலான பட்டியலில் 6-ஆம் இடத்தைப் பிடித்தது. கடந்த 2021-ஆம் ஆண்டில் 8-ஆவது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

தேசிய அளவிலான பல்கலைக்கழகத்துக்கான தரவரிசைப் பட்டியலில் ஜிப்மர் நிகழாண்டில் 15 இடங்கள் முன்னேறியுள்ளது. அதனடிப்படையில், கடந்த ஆண்டு 54-ஆம் இடத்திலிருந்து நிகழாண்டில் 39-ஆம் இடத்தைப் புதுச்சேரி ஜிப்மர் பிடித்துள்ளது.